**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**MC No.43/2015**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Vinodhini | Prosecution | P.W- 1 Chief conti. |
| Husband Name | Manavalan | Defence | |
| Village | Valuthalikudi, Radhnallur post | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 35 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>15.02.2023.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். எதிர்மனுதாரர் எனது கணவர். என் கணவரிடமிருந்து ஜீவனாம்சம்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு கட்சிக்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன். எனது தரப்பு கட்சிக்கு ஆதரவாக ம.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்ற மேல் முறையீட்டு எண்.12/2016 ல் உத்தரவு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சியத்தையும் சான்றாவணத்தையும் ஏற்று மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**DVC No.5/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Rajasundari | Prosecution | P.W- 1 Chief |
| Husband Name | Srinath | Defence | |
| Village | Valliamani Street, Movore | Taluk | Kattumanar kovil |
| Calling | | Religion | |
| Age | 37 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **06.01.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். 1-ம் எதிர்மனுதாரர் எனது கணவர் 2, 3 ஆம் எதிர்மனுதார்கள் எனது மாமாமனார், மாமியார். மேற்படி நபர்கள் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துனேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் விபரம் எனக்கு நன்கு தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் மனுவில் கோரிய பரிகாரத்தை எனக்கு வழங்கியும் எதிர்மனுதாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தரப்பு கட்சிக்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

எனது திருமண பத்திரிக்கை அசல் தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ-1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

சீர்காழி அனைத்து மகளீர் காவல் நிலைய ஆய்வாளரின் மேல் நடவடிக்கைக்கான கடிதம் **ம.சா.ஆ-2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

நான் எதிர்மனுதார்கள் மீது கொடுத்த புகார் மீது அனைத்து மகளீர் காவல் நிலைய மனு ரசீது **ம.சா.ஆ-3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

சீர்வரிசை பட்டியல் மற்றும் 20.08.2021, 26,07.2021 ஆம் தேதியிட்ட நகை வாங்கியதற்கான ரசீது **ம.சா.ஆ-4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**